வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை : திரு க.முனுசாமி, M.Sc., M.A., B.Ed.. M.Phil., M.B.A.,
ந.க.எண்.3857/ஆ2/2021, நாள் 26.01.2022

– – –

பொருள் : பள்ளிக்கல்வி / தொடக்கக்கல்வி – பொது மாறுதல் கலந்தாய்வு 2022 24.01.2022 முதல் 23.02.2022 வரை நடைபெற உள்ளதால் – அரசு/ நகரவை தொடக்க/ நடுநிலை/உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், அனைத்து பாட/ முதுகலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்ற கோருதல் – சார்பு.

பார்வை : 1)அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக்கல்வி (பது5(1)) துறை நாள் 17.12.2021
2)தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.25154/ஆ1/இ2/2021, நாள் 10.01.2022
3) சென்னை–6, தொடக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண.756/டி1/2021, நாள் 06.01.2022, 11.01.2022 மற்றும் 13.01.2022

– – –

மேற்காண் பொருள் சார்பாக, பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின்படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க/ நடுநிலை உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள்/ முதுகலை ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர் நிலை–1/கணினி பயிற்றுநர் நிலை–1/ தொழிற்கல்வி ஆசிரியர்/ பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை – 2/ உடற்கல்வி ஆசிரியர்/கலை/ இசை/ தையல்/ இடைநிலை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு, பதவி உயர்வு, பணிமாறுதல்/ பணிநிரவல்.

மேலும், வேலூர் மாவட்டத்தில் உள்ள, தொடக்க/நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/ பட்டதாரி ஆசிரியர்கள்/இடைநிலை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு, பணிமாறுதல், பணி நிரவல் கீழ்காணும் பள்ளிகளில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெற உள்ளது

| வ. எண். | கலந்தாய்வு நடைபெறும் நாள் | கலந்துகொள்ள வேண்டிய பள்ளிகள் | கலந்தாய்வு நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | 24.01.2022 முதல் 23.02.2022 வரை | அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் | ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA) மாவட்ட திட்ட அலுவலகம், காந்திநகர். வேலூர் – 6. |
| | | அரசு/நகரவை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகள் | தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி, ஆபிசர் லைன், வேலூர் –1 |

எனவே, கலந்தாய்வில் கலந்துகொள்ளும் அரசு/நகரவை தொடக்க/ நடுநிலை உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள் மற்றும் அனைத்துவகை ஆசிரியர்கள் வேகமாக பரவிவரும் கொரோனா பெருந்தொற்று காரணமாக கலந்தாய்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். மற்ற ஆசிரியர்களுக்கு அனுமதி இல்லை என

திட்டவட்டமாக தெரிவிப்பதுடன் பொதுமாறுதல் கலந்தாய்வு அட்டவணையில் தெரிவித்துள்ளபடி கலந்தாய்வில் கலந்துகொள்ள விண்ணப்பித்த சார்ந்த ஆசிரியர்கள் தவிர மற்ற ஆசிரியர்களோ, வேறு நபரோ கலந்தாய்வு நடைபெறும் இடத்தில் வருகைபுரிய அனுமதியில்லை தவறும் பட்சத்தில் சார்ந்த ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பொது மாறுதல் கலந்தாய்வு அட்டவணை

முதன்மைக்கல்வி அலுவலர்,
வெலூர்.

பெறுநர்

மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்

2) தலைமையாசிரியர்கள்
அனைத்து அரசு/நகரவை உயர் மற்றும்
மேல்நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்

3) வட்டாரக்கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்

நகல்
அலுவலக கோப்பிற்கு